# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2134/45 - 2019 අගෝස්තු මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.08.01

*2134/45 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு  பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2019 ஆம் ஆண்டின் 146 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/1/6/2018/யூஏ/228.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : கேஎஸ்/டீஎஸ்/எல்என்டீ/ஏசீ/8/5/15.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் கடமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர", இல. 1200/6,
காணிச் செயலகம், ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூலை 25.

### அட்டவணை

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், கெஸ்பேவ.

2. **காணியின் விபரம்** : மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், 581E, மஹல்வராவ கிராம அலுவலர் பிரிவில், மஹல்வராவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2019.05.29 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற் சுவட்டு இல. சீஓ/கேஎஸ்பீ/2019/163 இல் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு இல. 1 - தெனியவல - விஸ்தீரணம் : சுமார் 6.7550 ஹெக்டயார்**

வடக்கு : கால்வாய் ; கிழக்கு : கால்வாய் ; தெற்கு : பங்கலாவத்த கிராமம், கால்வாய் மற்றும் ஐய மாவத்தை ; மேற்கு : ஐய மாவத்தை மற்றும் கால்வாய்.

08-595